

தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 250 பேருக்கு தலைக்கவசம், 330 பேருக்கு எலக்ட்ரிக் கிட்டில், கழக நிர்வாகிகளுக்கு நிதியுதவிகள் ஆகியவை மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேயர் வசந்தகுமாரி, வே.கருணாநிதி, ஜெயக்குமார், காளேஸ்வரன், பேராசிரியர் பிரபு, தினேஷ், ரவிச்சந்திரன், ச.பிரபு, செந்தில், ஜோஸ் பிரபு, வினோத் குமார், அமிர்தராஜ், பிரபு, சரத் வெங்கடேசன், ராகேஷ், கௌதம், பிரசாந்த், இன்பராஜ், சதீஷ், துரை, சம்பத், சீனிவாசன், கார்த்திக், ஸ்டாலின்ட, சுரேஷ், சரவணன், யுவராஜ். சாகுல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைக்கும்

# பேராசிரியர் காதர் மொகிதீனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, ஜன. 6 -**

**இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைத்து, வருபவர் என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு:

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் நம் அனைவரின் மரியாதைக்குரிய 'தகைசால் தமிழர்' பேராசிரியர் காதர் மொகிதீன் ஐயா அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

பத்திரிகையாளர், பேராசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பலநிலைகளிலும் சமூகத்துக்குப் பங்களித்து, மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் தாங்கள் நீண்டகாலம் நலத்துடன் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# பழைய சோறு - ஊட்டச்சத்து - ஆரோக்கியத்துக்கான பலன்கள் குறித்த கருத்தரங்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!



சென்னை, ஜன 6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.01.2026) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், இரைப்பை குடல் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித்துறை சார்பில் "பழைய சோறு குறித்த அறிவியல் கருத்தரங்கம்" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி, விழா பேரூரை யாற்றினார். அவர் ஆற்றிய உரை வருமாறு:-

**"பழைய சோறு குறித்த அறிவியல் கருத்தரங்கம்"**

2009 ஆம் ஆண்டு இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அன்றைய தமிழ்நாடு துணை முதலமைச்சராக இருந்தபோது, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ஸ்டெம்செல் ஆராய்ச்சி மையத்தினை இந்திய மருத்துவ வரலாற்று கவுன்சில் (ICMR) இணைந்து தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் இம்மையம் 2022ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. அது வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக மேம்படுத்தப்பட்டது. இந்த மையத்தில் கடந்த 5 ஆண்டுகளாக மரு.ஜெஷ்வந்த் அவர்களின் தீவிர முயற்சியின் காரணமாக பழைய சோறு பற்றி பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்ட காரணமாக உலகிற்கு பல்வேறு தகவல்கள் இந்த கருத்தரங்கத்தின் வாயிலாக எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. பழைய சோறு என்பது நமது முன்னோர்களின் காலத்திலிருந்தே தொண்டு தொட்டு வருகின்ற ஒரு உணவாகும். சமைத்த உணவு நொதிக்கப்பட்டு இருந்த உணவு தான் பழைய சோறு. இந்தியாவில் இரவு ஊற வைத்த உணவு காலையில் உட்கொள்வது தான் பழைய சோறு. இந்த சோறு மூலம் பல்வேறு சத்துக்கள் நமது உடலில் செல்கின்றது. பழைய சோறு மூலம் நல்ல பாக்டிரியாக்கள் மற்றும் நுண்சத்துக்கள் இருப்பதை ஸ்டான்லி மருத்துவக்கல்லூரியின் ஆராய்ச்சி மையத்தில் கண்டு பிடிக்கப்பட்டு தற்போது வெளிப்படுத்தி வருகிறார்கள் குறிப்பாக நார்ச்சத்துக்கள் 631% அதிகமாகவும், எதிர்ப்பு மாவு சத்து 270% அதிகமாகவும், புரதச்சத்து 24% அதிகமாகவும் நுண் சத்துக்களான இரும்புச்சத்து, துத்தநாகம், செலினியம், வைட்டமின் - பி சத்துக்கள் இருக்கிறது. மேலும், இரும்பு சத்துக்களை 12 மடங்கு அதிகமாக உடலில் எடுத்துக் கொள்ள செய்கிறது. பழைய சோற்றில் இருக்கும் நன்மை தரக்கூடிய பாக்டீரியாக்கள் குடலில் சேர்ந்து 2,000 மேற்பட்ட உயிர் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்கிறது.

பழைய சோறு தினமும் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்

புற்றுநோய் வராமல் தடுப்பது, நீரிழிவு நோய் வராமல் தடுப்பது, குடலின் நல்ல ஆரோக்கியம் மற்றும் உடல் பருமன் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது மற்றும் கர்ப்பிணிகள் எடுத்துக்கொள்வதால் குழந்தை நன்றாக வளர்கிறது. குறை பிரசவம் வெகுவாக குறைகிறது, கர்ப்பகால நீரிழிவு நோய் வருவது குறைகிறது, கர்ப்பகால அதிக உயர் இரத்த அழுத்த நோய் வராமல் பாதுகாக்கிறது. இருதய நோயிலிருந்து காப்பாற்றுகிறது, இரத்த கொழுப்பு அளவுகளை குறைக்கிறது. கல்லீரலில் உள்ள கெட்ட கொழுப்புகள் மற்றும் ஆபத்தான அமிலங்களை கல்லீரலில் இருந்து வெளியேற்ற உதவுகிறது. அதிக வயிற்றுப்போக்கு உள்ளவர்களுக்கு குடலில் ஒரு அரணாக இருந்து நுண்சத்துக்கள் மற்றும் நீர் சத்துக்கள் வெளியேறாமல் பாதுகாக்கிறது.

பழைய சோறு சாப்பிடுவதால் சரியாக கூடிய பல்வேறு நோய்கள்

பல்வேறு வகையான வயிற்றுப்போக்கு நோய்கள், கிருமித்தொற்றால் ஏற்படும் வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, மலச்சிக்கல், எரிச்சல் கொண்ட நோய்க்குறி, வயிறு வீக்கம் மற்றும் வாயு பிடிப்பு போன்ற நோய்களிலிருந்து குணமாவதற்கு உதவுகிறது. இப்படியாக உடல் நலத்திற்கு பாதுகாப்பான மிகச் சிறந்த உணவாக பழைய சோறு இருக்கிறது. இதன் முக்கியத்துவம் கருதி ரூ.2.44 கோடி செலவில் 11.03.2022 அன்று சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் "வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறை" தொடங்கப்பட்டு பழைய சோறு குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், பழைய சோறு சிகிச்சை மூலம் இரைப்பை சிகிச்சை மேற்கொண்டவர்களிடமும் உரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.44 கோடி செலவில் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் "வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறை உருவாக்கப்பட்டது. மேலும் பழைய சோறு குறித்து நான் உங்களுக்கு எடுத்துரைக்க தகுதி படைத்தவராக இருப்பதை நான் அறிகிறேன். நான் சிறுவயதில் இருந்தே வாரத்திற்கு 2 முறை பழைய சோறு சாப்பிடும் பழக்கத்தை பின்பற்றி வருகிறேன். இப்போது இந்த கருத்தரங்கத்தின் மூலம் பழைய சோறு மூலம் கிடைக்கும் நன்மைகளை நான் அறிந்தபிறகு வாரத்தின் 7 நாட்களும் பழைய சோறு சாப்பிடுவது என்பது நான் முடிவு செய்திருக்கிறேன். ஏதாவது ஒரு உணவு இரவு 11 மணிக்கு காரமாக சாப்பிட்டு காலை 4 மணிக்கு எழுந்தவுடன் உடற்பயிற்சி செல்லும்போது குடல் எரிச்சல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. அதுவே பழைய சோறு சாப்பிட்ட அன்று காலையில் இந்த குடல் எரிச்சல் என்பது இல்லை. எனவே இது அறிவியல் பூர்வமாகவே இது ஒரு நல்ல பலனை தருகிறது என உணர்ந்தவன் நான். குடலில் ஏற்படுகிற புண் நீண்ட நாட்களுக்கு பிறகு புற்றுநோய் என்ற புது வடிவத்தோடு ஒரு பெரிய அளவிலான பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே அந்த புண்ணை சரி செய்வதற்கு பழைய சோறு காரணமாக இருப்பதால் எல்லோருமே இதனை உட்கொள்வது நல்லது. இதனால் பல நன்மைகள் உள்ளது. நோய் பாதிப்பிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ளலாம். அதையும் தாண்டி காலையில் இதனை எடுத்துக்கொள்ளும்போது தாய்மார்களுக்கு சமைக்கிற பணி என்பது 100 சதவீதம் குறைகிறது. இதனால் சமைக்கும் நேரமும் மிச்சப்படுகிறது. மேலும் பொருளாதாரமும் மிச்சப்படுகிறது. பழைய சோறு என்றால் ஏழையின் அடையாளம் என்கிற வகையில் ஒரு கேள்வியும் எழக்கூடும். ஆனால் நிச்சயம் ஒரு மருத்துவர் 5 ஆண்டு காலம் உழைத்து பல்வேறு வகையில் இந்த பழைய சோற்றினை சாப்பிட்டவர்களுடன் உரையாடி, பெற்ற பலனை எல்லாம் அனுபவ ரீதியிலாகவே உணர்ந்த காரணத்தினால் தான் இதை செய்து காட்டியுள்ளார்கள். எனவே இந்த ஆராய்ச்சி பெரிய அளவில் மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பது நம்முடைய ஒவ்வொருவருடைய கடமை. இதனால் யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். இதனால் எந்த பாதிப்பும், எதிர்வினையும் ஏற்பட்டுவிடாது. எனவே நாம் ஒவ்வொருவரும் பெரிய அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்த துறையின் சார்பில் நம்முடைய பெருமதிப்பிற்குரிய மரு.ஜெஸ்வந்த் அவர்களுக்கு இக்கல்லூரியின் முதல்வர் தொடர்ச்சியாக உறுதுணையாக இருந்துக் கொண்டு வருகிறார். இந்த துறையின் சார்பில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், இந்த செய்தியை பொது மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதற்கும் இது சம்பந்தமான குறிப்புகளையும், கோப்புகளையும், இத்துறையின் ஆராய்ச்சிகளையும் ஆவணங்களையும் வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் நமது துறையின் அலுவலர்கள் அனைவருடனும் பழைய சோறு தினம் குறித்து கலந்து பேசி துறையின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் விழா பேரூரை யாற்றினார். இந்நிகழ்வில், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1 கோடியில் பல் மருத்துவ பிரிவில், புதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் புனரமைப்பு பணிகள் நடைபெற்றதை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், இ.ஆ.ப., மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அரவிந்த், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஜோதிகுமார், நிலைய மருத்துவ அலுவலர் மரு.வனிதா மலர், குடல் அறுவை சிகிச்சை பிரிவு இயக்குநர் மரு.ஜெஸ்வந்த், பேராசிரியர் மரு. ஆனந்த் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள், மருத்துவ பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பெரியபாளையம் அடுத்த வடமதுரை ஊராட்சியில் சமத்துவ பொங்கல் விழா ஒன்றிய செயலாளர் பி.ஜெ.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்துக் கொண்டு சமத்துவ பொங்கல் துவக்கி வைத்து பெண்களுக்கான கோல போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பல்வேறு நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், பொதுக்குழு உறுப்பினர் ஏவி.ராமமூர்த்தி, நிர்வாகிகள் விபி. ரவிக்குமார், க.சம்பத், சிவசங்கர், ஜமுனா அப்புன், சீனிவாசன், ராஜேஷ், சுகன்யா, ஜெயலலிதா, விஜய் பிரசாத்,சண்முகம், ப.து.தமிழரசன், டி.கே. முனிவேல் உள்பட பலர் உள்ளனர்.




திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் பொங்கல் விழாவை முன்னிட்டு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஆவடி சட்ட மன்ற தொகுதி நடுகுத்தகை ஊராட்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு தூய்மை பணியாளர்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு உறுப்பினர்களுக்கு சமையல் பாத்திரம் சமையலடுப்பு வேட்டி சேலை, மற்றும் நலத்திட்ட உதவி பசியாற்றும் மையத்திற்கு தலா 50 ஆயிரம் மற்றும் கல்வி ஊக்கத் தொகைக்கு 1 லட்சம் வழங்கினார் உடன் மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு, நிர்வாகிகள் ஜி.விமல்வர்ஷன், யமுனா ரமேஷ், லட்சுமி, பொறியாளர் எம்.மோகன், கு. தமிழ்செல்வி, சுமதிவிஜயகுமார், ஜெ.சாக்ரடீஸ், எம்.குணாசேகர், ஹரிபாபு, ரமேஷ், ராதாகிருஷ்ணன், உதயா, சாந்தகுமாரி, சந்திரன், நவமணி, புனித ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஆலந்தூர் – பல்லாவரத்தில் 2,000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கி

# ஆலந்தூரில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில் நாளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு

## காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் !

*காஞ்சிபுரம்,ஜன.6-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஆலந்தூர் - பல்லாவரம் தொகுதியில் உள்ள 2,000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு, இலவச சீருடை - பொங்கல் பரிசு பொருட்களை மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் வழங்கி, ரூ.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குரோம்பேட்டை இராதா நகர் இரயில்வே சுரங்கப்பாதையை திறந்து வைத்து, அதன் பின்னர் ஆலந்தூரில் நடைபெறும் சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்கிறார் என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் திராவிட பொங்கல் விழாவை கோலாகலமாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது என்றும், ஆலந்தூரில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும் படி மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை :-*


*தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான பொங்கல் திருநாளை திராவிட பொங்கல் திருவிழாவாக - சமூக நீதிக்கான கொண்டாட்டமாக உடன் பிறப்புக்கள் மிகவும் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடிட வேண்டும் என்று, நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அன்பு அண்ணன் தளபதி அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று,*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் விழாவை மிகவும் கோலாகலமாக நடத்திடும் வகையில் கோலப் போட்டி - விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கிடவும், மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள் கழகத்தினருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கிடவும், பொங்கல் திருநாளன்று கலை - இலக்கிய விழாக்களை சிறப்பாக நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.*

*அந்த வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - மாண்புமிகு துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட பொங்கல் விழாவை யொட்டி, நாளை ஜனவரி 7-ஆம் தேதி மாலை நடைபெறும் 3 பொங்கல் விழாக்களில் பங்கேற்கிறார்.*

*நாளை மாலை 4.00 மணியளவில் புனிததோமையர் மலை, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கூட்ட அரங்கில், ஆலந்தூர் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை துணை முதல்வர் அவர்கள் வழங்குகிறார்.*

*பிறகு அவர் குரோம்பேட்டைக்கு சென்று, குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில் ரூ.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குரோம்பேட்டை ராதாநகர் இரயில்வே சுரங்கப்பாதையை திறந்து வைக்கிறார்.*



*அடுத்து அவர் பல்லாவரம் சந்தை ரோட்டில் நடைபெறும் பொங்கல் விழாவில், பங்கேற்று பல்லாவரம் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார்.*

*அதன் பின்னர் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் பெரியார் சிலை அருகில் அமைந்துள்ள திடலில் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் சமத்துவ பொங்கல் விழாவில் துணை முதல்வர் அவர்கள் பொது மக்களுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் கொண்டாட வருகை தருகிறார்.*

*ஆலந்தூரில் நடைபெறும் திராவிட சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் பெருந்திரளாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*




திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் ஒண்டி குப்பம் கிராமம் 294.295.296. மற்றும் பாக எண் 218யில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாறு பரப்பரை கூட்டம் மாவட்ட அவை தலைவர் கே. திராவிட பக்தன், தலைமையில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கே. எ. மதியழகன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், திராவிட மாடல் அரசின் சாதனைகளை பற்றி சிறப்புரையாற்றினார் உடன் ஒன்றிய செயலாளர்கள் க. அரிகிருஷ்ணன், பிரகாஷ் ஞான ஒளி, ஒன்றிய நிர்வாகிகள் சி.ஆர். குமரன், தாடி நந்தகுமார், மோகனசுந்தரம், வாசு, டில்லி, முத்து, செங்குட்டவன், சத்யா சேகரன், அருண்குமார், ஜி. ரவி, மகேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூவாளூர் சின்னதுரை
### சனவரி 6 (2014)



**தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவரும், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவரும், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.**

**திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.**

**1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் "பெரியார் விருது" வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**